அசல்

4.3.35 தி. சதாசிவஐயர்.

அசல் - 1.

Replied on 13.3.35

(51)

கடவுள் துணை.

யாழ்ப்பாணம்

## ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கம்.

## The Jaffna Oriental Studies Society.

தொன்மை மறவேல்

| Patron of the Society<br>His Excellency the Governor<br><br>President<br>Hon: Mr. L. Macrae<br>Director of Education<br><br>Vice Presidents<br><br>Secretary<br><br>Treasurer | Jaffna.<br>யாழ்ப்பாணம். |
|---|---|

உ

சிவமயம்.

4. 3. 1935

மகாகனம் பொருந்திய ஐயா அவர்கள் திருவடிகட்கு
அடியேன் தி. சதாசிவ ஐயர் பன்முறை வணக்கஞ் செய்து
தெரியப்படுத்தும் விஞ்ஞாபனம் வருமாறு — உபயகுச
லோபரி. தங்களது 81வது பிறந்தநாட் கொண்டாட்ட
விழாவை நேரில் உங்கு வந்து கண்டு மகிழும் பாக்கியம்
பெற்றிலேன். சதாபிஷேக முகூர்த்தத்திற்கு அழைப்புப்
பத்திரம் வரப்பெற்றேன். தங்களுக்குச் செய்யுஞ் சிறப்பெல்லாந்
தமிழ்த்தெய்வத்துக்குச் செய்வதேயாகும் என்பது இங்கு
ள்ளாரெல்லாரதுங் கருத்தாகும். தாங்கள் அரோக திட
காத்திரமும் எல்லாவகைச் சிறப்பும் மனச்சாந்தியும் நிரம்ப
ப்பெற்று இன்றுபோல என்றும் பல்லாண்டு பல்லாண்டு
வாழ எம்பெருமான் திருவருளை வேண்டி அவனடியி
ணையை யிறைஞ்சுகின்றேன்.

6.3.35 ஆகிய இம்மங்கல தினத்தை
யாங்களும் இங்கு ஒருபெரும் விழாவாகக் கொண்டா
டுவதற்கு ஆயத்தங்கள் செய்கின்றோம். 'யாழ்ப்பாண
ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும்', 'சைவா
நிலையமும்' சேர்ந்து இவ்விழாவை நடத்தவும்,
அப்போது சைவாங்கில மண்டபத்தில் தாங்கள் உருவப்
படத்தை

அசல்

4.3.35 தி. சதாசிவஐயர்.

அசல் -1.

அசல்

4.3.35 தி. சதாசிவஐயர்.

அசல் -1.

கடவுள் துணை.

யாழ்ப்பாணம்

# ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கம்.

# The Jaffna Oriental Studies Society.

தொன்மை மறவேல்

Patron of the Society
His Excellency the Governor

President
Hon: Mr. L. Macrae
Director of Education

Vice Presidents

Secretary

Treasurer

வைக்கவும் ஏற்குஞ்செய்தருள்வோம்.

Jaffna.
யாழ்ப்பாணம்.
193

20.2.35இல் யா. ஆ. தி. பா. சங்கத்தார் நிர்வாக
சபைக்கூட்டத்தில், தமிழுலகிற்குத் தாங்கள் செய்
துள்ள அரிய பெரிய தொண்டுகளை யெல்லாம் பாரா
ட்டி ஒருமங்கல வாழ்த்துப்பா சமர்ப்பித்தும், தங்கள்
ஞாபகப்பொருட்டு நிறுவவிருக்கும் தாபனநிதிக்கு
ரூபாய் ஐம்பது சேர்ப்பித்தும் சங்கம் தன் நன்றியறி
வையும் அபிமானத்தையும் வெளிப்படுத்தல் வேண்
டும் எனவுந் தீர்மானஞ் செய்யப்பட்டது.

அதன்படி 4.3.35ஆகிய இன்று
ம.m.m. ஸ்ரீமாந். K.V. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்
(பொக்கிஷதார்) விலாசத்துக்கு ரூபாய் ஐம்பது
தந்திமணி ஆர்டர் செய்திருக்கிறேன். மங்கல
வாழ்த்துப்பாவில் சிலபிரதிகள் பிரத்தியேகமாகத்
தங்களுக்கு இத்தபாலுடன் அணைத்து அனுப்புகின்
றேன். சிறியவையாயினும் இவற்றைத் தயை
கூர்ந்து ஏற்றருளும்படி பணிவுடன் வேண்டுகின்
றேன். வேறு அன்பர்களுக்கும் உபயோகமாகும்
என்பது கருதி வாழ்த்துப்பாப்பிரதிகள் 300 வேறு
பார்சலாகக் கட்டி யனுப்பியிருக்கின்றேன்.

தங்களுடைய அருமைத் தம்பியார் சுந்தரம் ஐயர்
அருமைப்புத்திரர் கல்யாணசுந்தரம் ஐயர் என்னும் அன்பர்
களுக்கு எனது நமஸ்காரத்தைத் தெரியப்படுத்தவேண்டுவது.
சிவம். — நமஸ்காரம். இங்ஙனம் அன்பன், தி. சதாசிவஐயர்

அசல்

4.3.35 தி. சதாசிவஐயர்.

அசல் -1.